# இயல் -10

# ஆய்வு முடிவுரை

*இயல்- 10*

# ஆய்வு முடிவுரை

இருபதாம் நூற்றாண்டு இலக்கிய எழுத்தாளர் வரிசையில் தே.ப. பெருமாள் குறிப்பிடத்தகுந்தவராவர். அத்தகையவரின் இலக்கியப்பணிகள் பாராட்டுவதற்குரியன. இந்த ஆய்வேட்டின் இயல்களிலுள்ள தொகுப்புரைகளைத் தொகுத்து கூறும் இயலாக இவ்வியல் அமைந்துள்ளது. தே.ப. பெருமாளின் படைப்புக்களை அறிமுகப்படுத்துவதும், தமிழ் இலக்கியத் துறைக்கும், சமுதாயத்திற்கும், தே.ப.வின் படைப்புக்கள் விளைவித்துள்ள பயன்களை மதிப்பிடுவதும் இந்த ஆய்வின் நோக்கமாகும்.

எளிய இனிய மொழிநடையைக் கொண்டு இந்நாள் வரை தமிழ் இலக்கியத்திற்கு வளம் சேர்ப்பன தே.ப.பெருமாளின் படைப்புக்கள். எழுபதுக்கும் மேலான நூல்கள் எழுதியவர். நாள், வார, மாத, இதழ்களிலும் பணியாற்றியவர். சிறந்த வானொலிப் பேச்சாளராக இருந்த போதும், நாடகத்துறை ஈடுபாடு தே.ப. பெருமாளுக்குப் பேரிழப்பையே கொடுத்தது. காந்தீயத்தில் நம்பிக்கை கொண்டவர். பல்வேறு அங்கீகாரங்கள் இவரது படைப்புக்களுக்கும் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. பல்வேறு விருதுகளையும் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. பல்வேறு சங்கங்களைத் தோற்றுவித்துச் சமூகச் தொண்டாற்றிப் பிறர் நலம் பேணும் ஒருவராகத் திகழ்ந்தார்.

'கலை கலைக்காக' என்னும் கொள்கை கவிஞர் தே.ப. வின் படைப்புக்களின் வழி வெளிப்படுகிறது. இவருடைய கவிதைகள் அவர் வாழ்ந்த காலகட்டத்தைப் பிரதிபலிப்பதுடன், தமிழ்நாடு, தமிழ்மொழி, தமிழ்மக்கள், என்ற குறுகிய வட்டத்திற்குள்ளேயே நிற்கின்றன. கவிதைப் படைப்பிற்குக் கவிமணியை முன்னோடியாகக் கொண்டிருந்த இவர் மரபிலக்கியத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளார் என்பதை அவரது கவிதைகள் புலப்படுத்துகின்றன.

பல்வேறு வகைகளில் அமைந்துள்ள கவிஞர் தே.ப. பெருமாளின் கதைகள் இறைப்பற்று, தேசபக்தி, நீதி, அறம், கவின்கலை முதலானவற்றின் வாயிலாக மாணவர்களிடையே சமுதாய நல்லிணக்கத்தை வளர்க்கும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ளன. தே.ப. பெருமாள் தம்முடைய கதைகளில் தாம் பழகிய இடங்களையும், தம்முடைய வாழ்க்கையிலிருந்து கிடைத்த கதைப்பாத்திரங்களையும், இணைத்துள்ளார். கதைகளின் அமைப்பு மாணவர்களுக்கு நல்வழிகாட்டிக் கறைதிரையற்ற சமுதாயத்தைப் படைக்க வேண்டும் என்ற நோக்கத்தை வெளிப்படுத்துகின்றது. கதையையும், அதன் முடிவையும் ஆசிரியர் கூற்றில் அமைப்பதும், ஆசிரியர் தம்மனக்குமுறல்களை வாசகர்கள் கேட்க வைப்பதும் தே.ப. பின்பற்றும் உத்திகளாக உள்ளன. கதைகளின் வழி சங்ககாலத்தையும் பிரதிபலிக்கின்றார். கவிஞரின் கதைகள் வரலாற்றையும், புராணங்களையும், சார்ந்தவையாக இருந்தாலும் அவை புதுப்புது

வடிவங்களில் திகழ்கின்றன. கவிதையைப் போலவே கதைகளிலும் குறுகிய பார்வையே கொண்டுள்ளார்.

தே.ப. பெருமாளின் நாவல்கள் பொருள், வடிவம் ஆகிய இலக்கியக் கூறுகள் இரண்டிலும் சிறந்து விளங்குகின்றன. உயர்ந்தச் செய்தியைச் சுவைமிக்க வகையில் ஆசிரியர் நாவல் வடிவில் தரும்போது சமுதாயம் பயன் அடைகிறது. அவரது நாவல்கள் அவரை ஒரு கேரள வரலாற்று நாவலாசிரியனாக இனங்காட்டி நிற்கின்றன. நாவல்களில் அமைப்பு ரீதியாகவும், உள்ளடக்க ரீதியாகவும், 'கலைகலைக்காக' என்னும் கொள்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. நாவல் உத்திகளும் பொருத்தமான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் சமுதாயச் சிக்கல் சார்ந்த நாவல்களில் அச்சிக்கல்களுக்கு நேரடியாகத் தீர்வுகளைக் காட்டியிருப்பது சிறப்பிற்குரியது.

கவிஞரின் நாடகங்கள் பல்வேறு வகைகளாக அமைந்தாலும் அவற்றில் நகைச்சுவை இடம்பெற வில்லை என்பது அவற்றின் தனித்தன்மையாகும். 'வாசவதத்தை' என்ற கவிதை நாடகம் அவரது கவித்துவத்திறனை வெளிப்படுத்துகிறது. மேடை நாடகத்திற்குக் கவிஞர் அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பது இவ்வியலின் வழி எடுத்துக்காட்டப்படுகிறது.

கவிஞர். தே.ப. வின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஒப்பீட்டு முறையிலேயே எழுதப்பட்டுள்ளன. கவிமணியை, பாரதியார், பாரதிதாசன், ஆகியவர்களோடு ஒப்பிட்டுக்கவிமணியின் தனித்தன்மையை வெளிப்படுத்துகின்றார். சங்க இலக்கியப் பாடல்களைத் திறனாய்வு செய்து அவற்றின் அமைப்பு முறைகளையும், சுவை நிலைகளையும் இனங்காட்டுகின்றார். அத்துடன் திரை இசைப்பாடல்களைத் திறனாய்வு செய்து அவற்றில் பிற இலக்கியச் சாயல்கள் படிந்துள்ளதை வெளிப்படுத்திச் செல்கிறார். அத்துடன் சங்கப்பாடல்கள் வழி வெளிப்படும் அக்காலப்புலவர்களின் வாழ்க்கை அனுபவங்களையும், அன்னாரின் தமிழ் உணர்வுகளையும் எடுத்துக்காட்டுகிறார்.

மாணவர்களுக்குப் பல்வேறு தலைவர்களையும், சான்றோர்களையும், அறிஞர்களையும், அறிமுகப்படுத்தி வாழ்க்கைக்கு வழிகாட்டும் விதமாக அமைந்துள்ளன கவிஞரது வாழ்க்கை வரலாற்று நூல்கள். இவற்றின் அமைப்பு முறை கவிஞரைச்சிறந்த வாழ்க்கை வரலாற்றாசிரியராகக் காட்டுகிறது. கவிஞர் வெளிப்படுத்தியுள்ள வாழ்க்கை வரலாறுகள் மிகுதியும் நசுக்கப்பட்ட மக்களினத்தை விடுவிப்பதற்குப் போராடிய பெரியோர்களைப் பற்றியதாகவே அமைந்துள்ளன.

கவிஞர் தே.ப. பெருமாள் பதிப்பாசிரியராகவும், தொகுப்பாசிரியராகவும், விளங்கினார் என்பதை 'பெரியோர் சொல்லமுதம்' 'கவிமணி தேவிமலர்' போன்ற நூல்கள் வெளிப்படுத்துகின்றன.

பின்னிணைப்புவழி கவிஞருக்குப் பல அமைப்புக்களுடனும், பல அறிஞர்களுடனும் இருந்த தொடர்புகள் காட்டப்பட்டுள்ளன.

தே.ப. வின் படைப்புக்கள் தனித்தனி இலக்கிய வகைகளாக நுணுகி ஆராயப்பட வேண்டும்.

கவிமணியோடு அதிகம் தொடர்புடையவராக வாழ்ந்ததால் கொள்கை, கருத்து, இலக்கிய அமைப்பு அடிப்படையில் அவருடைய தாக்கம், தே.ப. பெருமாளின் படைப்புக்கள் வழி எவ்வாறு வெளிப்படுகின்றது என்பதைத் தனி ஆய்வாக மேற்கொள்ளலாம்.

மேலும் தே.ப. வின் வரலாற்று நாவல்களைப் பிற வரலாற்று நாவல்களோடு ஒப்பிட்டு ஆய்வு செய்யலாம்.